ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1655/2 - 2010 මැයි 24 වැනි සඳුදා - 2010.05.24

*1655/2 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78.*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2010.04.21

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறானதும் 2008, ஒகத்து 18 ஆம் திகதிய 1563/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 1990, சனவரி 5 ஆம் திகதிய 591/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் இலங்கை திறந்த பல்கலைக்கழக கட்டளைச் சட்டம் அக்கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பந்தியில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(அ) அதன் (3) ஆம் உட்பந்தியில் விடயம் (iv) ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் :-

"(iv) கணிதம் மற்றும் கணனி அறிவியல் ;"; அத்துடன்

(ஆ) அதன் (4) ஆம் உட்பந்தியில் விடயம் (vi) ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் :-

"(vi) புடவை மற்றும் ஆடைத் தொழில் நுட்பவியல் ;".

5-147